# நடையியல் நோக்கில் ஆறாம் ஏழாம் திருமுறைகள்

**சிவராணி. சி**[1]


## ஆய்வுச்சுருக்கம்:

*சைவசமயக்குரவர்களாகப் போற்றப்படும் நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரத் திருப்பதிகங்கள் இறைவனின் மேன்மையையும், கருணையையும், சைவநெறியின் சிறப்பையும், அடியார்களின் ஈடுபாட்டையும் வியந்து போற்றுகின்றன. திருமுறைகள் வாழ்க்கையை முறையாக வாழ்வதற்குரிய நெறிமுறைகளைக் கூறுவன. தம் வாழ்வில் பெற்ற இன்ப, துன்ப அனுபவங்களையும் அவற்றால் கண்டறிந்த உண்மைகளையும் கூறுவதுடன், அன்பும் தொண்டுமே இறைவனை அடையச் சிறந்த வழி என்பதனைத் தேவாரப்பதிகங்கள் மூலமாகக் காட்டுகின்றனர். இவற்றை எளிய நடையில் சிறுசொற்கள், சொற்றொடர்கள், இலக்கணக்கூறுகள், மொழிக்கூறுகள் மூலமாக மேன்மையான தத்துவக் கருத்துக்களையும் சிறப்பியல்புகளையும் பாமரமக்களின் மனதில் நிற்கும் வண்ணம் பாடியிருப்பதைக் காணலாம். மொழி என்பது கருத்தைப் பரிமாற்றம் செய்யும் ஊடகம் என்பது மொழியியலாளர்களது கருத்து, ஆயினும் அவ்வவ்மொழிகளைப் பேசும் மக்கள் கூட்டத்திற்கு அவை உணர்ச்சிகரமான வெளிப்பாட்டுக்கருவியும் கூட. அவ்வகையில் நடையின் நல்லியல்புகளான சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், படிப்பவருக்கு இனிமை, நல்ல சொற்கையாட்சி, சொற்புணர்ச்சி, ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைத்தல், சிறந்த பொருள் பயத்தல், உயிரோட்டமான கற்பனை போன்றன எல்லாம் ஆறாம் ஏழாம் திருமுறைகளில் இழையோடி உள்ளதைக் காணமுடிகின்றது. இப்பதிகங்களில் ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை, பொருள்நிலை, அணிநிலை போன்ற பல மொழிக்கூறுகளைத் தத்தமக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்த நடையியல் உத்திமுறைகளைக் கையாண்டு பாடியுள்ளனர். அம்மொழிக்கூறுகளை, நடையியற் கூறுகளை மொழியியல் அடிப்படையில் தெளிவாக ஆராய்ந்து, அவை பற்றிய சிந்தனையை வெளிக்காட்டுவதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. ஆறாம் ஏழாம் திருமுறைகளில் கையாளப்பட்டுள்ள மொழிநடைப் பிரயோகங்கள் குறித்த கருத்துக்களை ஆய்வு செய்வதன் மூலம் அவர்களின் மொழிநடைச் சிறப்பையும், அவர்கள் காலத்து மொழிநடை அமைப்பினையும் அறிதலே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வானது ஆறாம் ஏழாம் திருமுறைகளில் கையாளப்பட்டுள்ள மொழிநடை அமைப்புக்களை விபரிக்கும் ஒரு விபரண ஆய்வாக அமைகின்றது.*


**திறவுச்சொற்கள்:** திருமுறைகள், மொழிக்கூறுகள், நடையியற்கூறுகள், உத்திமுறைகள், மொழியியல்

[1]*மொழியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
srisatkunarajahs@gmail.com

## அறிமுகம்

தமிழர் சமயப் பண்பாட்டிற்கு இடுக்கண் ஏற்பட்டபோது அவர்தம் பண்பாட்டுக் கோலங்களையும் கலைகளையும் இறைக்கோட்பாட்டியலையும் நிலைநிறுத்தும் வகையினிலும் பேணிக்காக்கும் பெருநோக்கிலும் பக்தி இயக்கமொன்று கிளர்ந்தெழுந்தது. அதன் பின்னணியிலேயே சிவனடி தொழ மறவாத சிந்தனையாளர்களான மெய்யடியார்கள் பலர் தோன்றி சைவம் தழைத்தோங்கச் செய்தார்கள்.

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் என்று கூறப்படுகின்றன. அவை தெய்வங்களுக்கு ஆரமாக, இசைப் பாடல்களாக முழுவதும் அமைகின்றன. பலவகைப் பண்களில் பாடப்பெற்றன. மூவர் அருளியமையால் மூவர் தேவாரம் என்று குறிப்பிடப்படுகின்றது. திருஞானசம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளைத் திருக்கடைக்காப்பு என்று குறிப்பிடுகின்றனர். நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகத் திருநாவுக்கரசரின் இசைப்பாடல்கள் குறிப்பிடப்படுகின்றன. ஏழாம் திருமுறையாகச் சுந்தரரின் திருப்பாட்டு அமைகின்றது. நாயன்மார்கள் கோயில் வழிபாட்டு முறையைக் கூறுவதுடன், மக்களின் ஆலயத் தொண்டை ஊக்குவிக்கும் வகையில் தமது பாடல்களில் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகின்றனர்.

அன்பும் தொண்டுமே இறைவனை அடையச் சிறப்பான வழி எனவும் கல்விப்பெருமையோ அன்றிக் குடிப்பெருமையோ முக்கியமானதல்ல எனவும் நாவுக்கரசர் தமது பாடல்கள் வாயிலாகக் குறிப்பிடுகின்றார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவர் திருவாக்கு.

"….அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" (7182)

"கங்கையாடிலென் காவிரி யாடிலென்
….எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே" (6225)

என்ற பாடல்கள் வாழ்க்கை பற்றிய பல உண்மைகளை எமக்குப் புலப்படுத்துகின்றன. சுந்தரருடைய தேவாரங்கள் அவருக்கு ஏற்பட்ட 'இறையனுபவ' நிலையையும், அதில் அவர் கொண்டிருந்த பற்றுறுதியையும் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. வாழ்க்கை முழுவதையும் ஒரு மாயத் தோற்றமாகக் கணிக்கும் பார்வையும் நிலையற்றதொரு வாழ்க்கைச் சூழலிலே நிலையானவற்றைப் பேணிக்கொள்ள வேண்டும் என சில பதிகங்களில் குறிப்பிடுகின்றார். அறம், தெய்வ நம்பிக்கை என்பவை நிலையானவை என்கின்றார்.

"தோற்றம் உண்டேல் மரணம் உண்டு துயரம் மனை வாழ்க்கை
மாற்றம் உண்டேல் வஞ்சம் உண்டு" எனவும் (7287)

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ் போது பிறவிக் கடல் பசி நோய் தரும் பறிதான்" (8016)

எனவும் குறிப்பிடுகின்றார். ஆறாம் ஏழாம் திருமுறைப் பாடல்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் கையாண்ட மொழிநடை இவ்வாய்வினைப் பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக அமையுமெனலாம். மொழியைச் சார்ந்தது இலக்கியம். அது மொழியின் வழியாகவே தன்னை வெளிப்படுத்துகிறது. எனவே அதனை மொழிசார் கலை (Verbal Art) என்பர். இலக்கியத்தின் மொழியமைப்பானது அதனுடைய செயல்பாடுகள், பண்புகளுக்குக் காரணியாகவும், அடையாளமாகவும் விளங்குகின்றது. இலக்கியத்திற்கு அதனுடைய இலக்கியத் தன்மையே (Literariness) காரணம் என்றும் அதனைத் தருவது மொழியமைப்பே என்றும் கூறுவர். இலக்கியத்தில் முக்கியமாகக் கவிதையில் மொழி சில தனிச்சிறப்பான பண்புகளுடன் இயங்குகிறது என்று விளக்குவர். ஒலியமைப்பு (Sound texture), சொல் அமைப்பு (Lexical, diction), தொடரமைப்பு (Syntactic) ஆகிய நிலைகளில் அத்தகைய நடையியல் சிறப்புக் கூறுகள் காணப்படுகின்றன. சொல்லுவோன் உணர்ச்சிக்கும், அவனுடைய மொழியில் வெளிப்படுகின்ற குரல் அல்லது ஒலியின் ஏற்ற இறக்கம் அல்லது அமைப்புக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது என்ற அடிப்படையில் கவிதை மொழியின் ஒலியமைப்பு அல்லது ஒலிப்பின்னல் அமைகிறது. அது போலவே சொற்களும், அவை திரும்பத் திரும்ப வருதலாகிய பண்பும் அமைகின்றன. குழைவு, கனிவு, காதல் போன்ற சூழல்களில் ஒலிகளும் சொற்களும் அமைவதற்கும், கோபம், எரிச்சல் முதலிய சூழல்களில் அவை அமைவதற்கும் வேறுபாடுகள் உண்டு. இவ்வாறு நடையியல் கூறுகள், மொழியியல் அணுகுமுறையின் மூலமாக அறியப்படுகின்றன.

பொதுவாக ஒரு மொழியின் நடையமைப்பு விளக்கத்தில் மொழிநடை உத்திமுறைகள் முக்கிய பங்கினைப் பெறுகின்றன. தெளிவான நடையமைப்பு விளக்கத்தினைக் கொடுப்பதற்கு இந்த உத்திமுறைகள் அவசியமானவையாகக் காணப்படுகின்றன. நடையியல் கூறுகளை இந்த உத்திமுறைகளைப் பயன்படுத்தி விளக்குவதன் மூலம் குறிப்பிட்ட படைப்பின் சிறப்பும் நடையமைப்புத் தெளிவும் வெளிப்படுத்தப்படுகின்றது. நாவுக்கரசர் ஆறாம் திருமுறையிலும் சுந்தரர் ஏழாம் திருமுறையிலும் பல உத்திமுறைகளைச் சிறப்பாகக் கையாண்டுள்ளனர். ஒலிநிலை உத்திமுறை, சொல்நிலை உத்திமுறை, தொடர்நிலை உத்திமுறை, பொருள்நிலை உத்திமுறை, கூற்றுநிலை உத்திமுறை என அவை வகைப்படுத்தப்படுகின்றன. தேவார நடையமைப்பு ஏனைய நடைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. இங்கு நீக்கல்

உத்திகள் பெரும்பான்மையாகக் கையாளப்படுகின்றன. ஓசை நயத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகின்றது. எதுகை, மோனை, உவமை, உருவகம், முரணணி போன்றன கூடுதலாகக் கையாளப்படுகின்றன. தேவாரப் பாடலடிகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அரிய சொற்களைப் பயன்படுத்தியும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சொல்தரும் பொருள் அப்பொருள் தோற்றுவிக்கும் உணர்வு என்பன முக்கியம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள சொற்களை அடிப்படையாகக் கொண்டு அப்பாடல்களின் மொழிநடையமைப்பு எவ்வாறாகக் காணப்படுகின்றன என்பதனை இக்கட்டுரை விளக்குகின்றது.

ஒலிக்குறிப்புச் சொற்கள், இரட்டைக் கிளவி, இணைச்சொல், எதிர்ச்சொல் போன்றவற்றை ஒலிநிலை உத்திகளாகக் காட்டலாம். இவை பாடல்களைச் சிறப்புற வர்ணிப்பதுடன், பொருள் உணர்வினையும் ஆழமாகப் புலப்படுத்தக்கூடியனவாகும். ஆறாம் ஏழாம் திருமுறைப்பாடல்களில் குரலொலி, சங்கொலி, பாட்டொலி, மறையொலி, விழவொலி, வேள்வொலி எனப் பலவகையான ஒலிகள் ஓசை நயத்திற்காக கையாளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

“இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ” (7180)
“தென்னாத் தெனாத் தெத் தெனா என்று பாடிச்”
“புற்று ஏறி கூ கூ என அழைக்கும் புன வாயிலே” (7740)
“ஞமணம் ஞாஞணம் ஞாணம் ஞோணம் என்று
ஓதியாரையும் நாண் இலா” (7562)

இவர்களது மொழியாட்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக இரட்டைக் கிளவிகள் கையாளப்பட்டுள்ளன.

“நெறுநெறன அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்” (6432)

சொற்களை இரட்டிக்க வைத்து அடுக்குத் தொடராகப் பொருளைப் புலப்படுத்தும் உத்தி முறையாகும்.

“சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி” (6568)
“தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற” (6330)
“முறைமுறை பலபல நெறிகளும் காட்டி” (7019)
“நீள்நீள் சடையான் நெல்லிக்காவு நெடுங்களம்” (7343)
“கூடிக் கூடித் தொண்டர் தங்கள்” (7270)

இணைச்சொற்கள் பல வகையில் திருமுறைப் பாடல்களில் கையாளப்பட்டு உள்ளன. இவை படிப்பவருக்கு இனிமை பயப்பனவாகக் காணப்படுகின்றன.

“எண்ணானாய் எழுத்தானாய் கடலே ழானாய்” (7902)

“சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி செய்வானை” (7902)

“நரை திரை மூப்பும் நடலையும் இன்றி” (7932)

“ஆடலும் பாடலும் வல்லீரோ சொலும்” (7591)

ஒலிநயத்தின் மூலம் எதிர்ச்சொல், பொருளைத் தெளிவுபடுத்தப் பயன்படுத்தப்படுகின்றது.

“விண்ணுலகும் மண்ணுலகு மானார் போலும்” (6404)

“கடிமலர்கள் பலதூவிக் காலை மாலை” (6268)

“வந்த வரவும் செலவு மாகி” (6410)

“அயனொடு அன்றி அரியும் அடியும்முடி காண்பு அரிய” (7352)

“ஆரும் அளவு அறியாத ஆதியும் அந்தமும்” (7676)

இவையெல்லாம் பொருளைச் சிறப்பிப்பதற்காக இடமறிந்து கையாளப்பட்டு உள்ளமை சிறப்பானதாகும்.

திருமுறைகள் அனைத்தும் உலகம், உயிர், இறைவன் ஆகிய முப்பொருள்கள் பற்றிப் பேசுகின்றன. எண்ண, படிக்க, சுவைக்க இன்பம் தருவனவாகக் காணப்படுகின்றன. இவையெல்லாம் திருமுறைகளில் கையாளப்பட்டுள்ள சொற்கள், சொற்றொடர்கள், சொற்புணர்ச்சிகள் இலகுவாகவும், புரிந்து கொள்ளக்கூடிய வகையிலும், எளிய நடையிலும் அமைந்திருப்பதனால் ஆகும். இங்கு சிறந்த சொல்லாட்சி, மூவிடப்பெயர், எண்ணுப்பெயர், சொல்லடுக்குப் பிரயோகம், அடைகள், உம் என்ற இணைப்பிடைச்சொல் பயன்பாடு, எதிர்மறைகள், வேற்றுமைகள், துணைவினைகள், வினாச்சொல், உறவுப் பெயர்ப்பயன்பாடு, ஊர்ப்பெயர், தலப்பெயர், மரியாதை வடிவப் பயன்பாடு போன்ற சிறப்புக் கூறுகளைப் பயன்படுத்துதல் எனப் பலவகையான சொல்நிலை உத்திகள் கையாளப்பட்டுள்ளன. உறவு நெருக்கத்தைக் கூறவும் பக்தியின் ஆழத்தை அடியவர்களுக்கு வெளிப்படுத்தவும், அடியவர்களை இறைவன்பால் பக்தி செலுத்தத் தூண்டவும் திருமுறைப் பாடல்களூடாக மூவிடப் பெயர்கள் பல இங்கு உத்திமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

“ஓசை யொலியெலா மானாய் நீயே” (6623)

“நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்” (6555)

“அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ” (7173)

“ஆக்கும் அழிவும் அமைவும் நீ என்பன் நான்” (7262)

“நாக்கும் செவியும் கண்ணும் நீ என்பன் நான்” (7262)

என்னும் பெயர்களைப் பயன்படுத்துதல் கூட இலக்கியங்களில் உத்திநிலையைப் பெறுகின்றன. இவை சொல்லின் நுண்ணிய பொருள், பொருட் பேதங்களைப் புலப்படுத்துகின்றன. ஆதார எண்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துதல், எண்களை அடுக்கிப் பாடுதல், குறியீடாகப் பயன்படுத்திப் பொருள் கூறல், ஒரு, ஓர், மும், ஈர், ஏழ், எண் எனப் பல எண்ணுப் பெயர்களை எண்களுக்கும் பெயர்ச்சொற்களுக்கும் அடையாகப் பயன்படுத்துதல் எல்லாம் எண்ணுப்பெயர் உத்திமுறைகளாக அமைகின்றன.

"பதினெண் கணங்களும் பாடும் மடி" (6297)
"எண்ணாயிரநூறு பெயராய் போற்றி" (6823)
"ஐந்நான்கு தோளுந் தாளுஞ்" (6572)
"அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சு நான்கும்" (7299)
"எண் தோளினை முக்கண்ணினன் ஏழ் இசையினன்" (7951)
"ஏழ் இசை ஏழ் நரம்பின் ஓசையை" (7751)

இறைவனின் தோற்றப்பொலிவு உமையின் தோற்றப் பொலிவு, இயற்கையை வர்ணிக்க என அடைகள் பல கையாளப்பட்டுள்ளன. இவை சொல்லின் பண்பினைச் சிறப்பிக்கின்றன.

"கடி பொழில்கள் சூழ்தென் னாரூர்ச்" (6249)
"கடி மலர்கள் பல தூவிக் காலை மாலை" (6268)
"துடி இடை கல் மடவாளொடு" (7315)
"கடி கொள் புனல் சடை கொண்ட நுதல்" (7796)

எதிர்மறை வினைவடிவங்களும் திருமுறைப் பாடல்களில் இடம்பெற்று உத்திநிலையைப் பெறுகின்றன.

"மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்" (6713)
"ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்" (6713)
"பசுவே ஏறிலும் பழியேன்" (7377)
"மாட்டேன் மறுமையை நினையேன்" (7377)

'உம்' என்ற இணைப்பிடைச் சொல்லானது இங்கு கையாளப்பட்ட முறைமை, நடையியல் கூறுகளின் சிறப்பு வழக்குகளில் ஒன்றாகும்.

"பெரு நலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்" (7967)
"பிறையும் அரவும் புனலும்" (7967)
"கரையும் கடலும் மலையும் காலையும் மாலையும் எல்லாம்" (7964)

வேற்றுமையை அடுக்கிப் பாடல்களைப் பாடியிருப்பதும், இங்கு உத்திநிலையைப் பெறுகின்றது.

“அம்மானை யலைகடல்நஞ் சயின்றான்” (6250)
“ஐயனை அத்தனை ஆள் உடை ஆமாத்தூர் அண்ணலை” (7690)
“மையனை மையணி கண்டனை வன்றொண்டன்” (7690)
“நீறுடைய திருமேனி பாக முண்டோ” (7198)
“முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்”
“மோடு உடைய சமணர்க்கும் முடை உடைய சாக்கியர்க்கும்
மூடம் வைத்த”(8145)

நாயன்மார்கள் இறைவன் மீது கொண்டிருந்த அதீத அன்பினால் அவரை நோக்கி வினா எழுப்புவதாகப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

“ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே” (7175)
“பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே” (7175)
“கட்டி வாழ்வது நாகமோ சடைமேலும் நாறு கரந்தையோ” (7555)
“ஏறு தாங்கிய கொடியரோ சுடு பொடியரோ” (7554)

வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு சிற்சில உறவுப் பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. கூர்மையாக நோக்குமிடத்து தாய், தந்தை ஆகிய இருவரையும் சுட்டுவதற்கோ அழைப்பதற்கோ பயன்படுத்தப்படும் உறவுப் பெயர்களே உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. சோகம், துன்பம், துயரம் போன்ற உணர்வுகளில் ஒன்றோ பலவோ உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் போதும் அல்லது நோய்வாய்ப்பட்டிருக்கும் போதும், வருந்தி இறைவனை வழிபடும் போதும் சில சூழமைவுகளில் உறவுப் பெயர்கள் கையாளப்படுகின்றன. திருமுறைப் பாடல்களில் உறவுப் பெயர்கள் உத்திகளாகக் கையாளப்பட்டுள்ளன.

“எத்தாய ரெத்தந்தை யெச்சுற்றத்தார்” (6863)
“தந்தையார் தாயாருடன் பிறந்தார் (7162)
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே” (7162)
“அப்பன் நீ அம்மை நீ ஐய னும்நீ (7173)
அன்புடைய மாமன் மாமியும் நீ” (7173)
“எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை தம்பிரான் (7715)
சாரணன் தந்தை எம்பிரான் எந்தை தம்பிரான்” (7720)

தேவார காலத்தில் பெரு வழக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த பன்மை ஏவல் வினைமுற்றுக்களான தொழுமின்கள், சேர்மின்கள், கேண்மின்கள், போமின்கள், வம்மின்கள், செய்மின்கள் முதலியன முன்னிலை இடத்தில் நேரடியாக 'நீங்கள்' என்ற முன்னிலைச் சொல்லைப் பயன்படுத்தாது இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளைப் புலப்படுத்துகின்றனர். இவையும் உத்திமுறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

"புகலூர் பாடுமின் புலவீர்காழ்" (7564)

"பூண்டனன் பூண்டனன்பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கள்" (7680)

"சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்" (8046)

மூன்று காலத்தையும் உணர்த்துவதற்கு வருவதற்குக் கையாளப்பட்ட சொற்களாக பண்டு, அன்று, இன்று, என்று என்பன காணப்படுகின்றன.

"துயரிலங்கை வேந்தன் துளங்க அன்று" (6484)

"பார்த்தனுக்கன்று பாசுபதம் கொடுத்தருளினாய் பண்டு
பகீரதன் வேண்ட" (7790)

"அடங்கலார் ஊர் எரியச்சீறி அன்று மூவர்க்கருள் புரிந்தீர்" (7276)

"என்றும் நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்" (7209)

வியங்கோள் வினைவடிவங்களான வாழிய, வாழியர், புகழ, மூழ்க, வீழ்க போன்றன திருமுறைப்பாடல்களில் கையாளப்பட்டுள்ளன. வாழ்த்தவும் மற்றொருவர் மீது கொண்டுள்ள விருப்பு வெறுப்பைக் காட்டவும் கையாளப்பட்டுள்ளன. மேலும் அளவுப் பெயர்களான சில, பல, பலர் போன்ற வடிவங்களும் கையாளப்பட்டுள்ளன. 'ஆய்' எனும் கூட்டு வினையடை வடிவம் அடுக்கியும் வருகின்றது. ஊனாய், உயிராய், அகலிடமாய், கழியாய், கடலாய், ஆதிரையாய், நிறையுடையாய், மறைவல்லாய் இவையெல்லாம் திருமுறைப் பாடல்களின் சிறப்பைக் காட்டுவனவாகக் காணப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்களும் சில இடங்களில் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கன. தேவாரப் பாடல்களின் காலத்தில் வழக்கிலிருந்த பேச்சு வழக்குச் சொற்களின் பிரயோகம் மூலம் பாமர மக்களின் மனத்தில் பக்தியுணர்வைத் தோற்றுவித்துள்ளனர். ஐஞ்சு, உசிர், ஆகாசம், பேர், பெண்டுகள், நினைப்பு என்பன குறிப்பிடத்தக்கன.

ஆய்வு நோக்கில் பார்க்கும்போது தலம் சுட்டிப்பாடப்படும் திருமுறைப் பாடல்களில் மூன்று இயல்புகள் காணப்படுகின்றன. இறைவனின் பெருமை, இறைவன் இருக்கும் ஊரின் பெருமை, அந்த ஊருக்குச் சென்று வழிபட்டால் அடியார்கள் பெறும் நன்மை.

"தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன்குடி சீராப் பள்ளி தெங்கூர்" (6944)

"நிலவுபெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்
கலிவலிமிக் கோகைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காணலாமே"
"தேங்கூரும் திருச்சிற்றம்பலமும் சிராப்பள்ளி
பாங்கு ஊர் எங்கள் பிரான் உறையும் கடம்பந்துறை" (7339)

மேலும் திருமுறைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பழமொழிகள், உவமைகள், இயற்கை வர்ணனைகள், இறைவனை வர்ணிக்கும் தன்மைகள் எல்லாம் சிறப்புக் கூறுகளாகவும், தொடர்நிலை உத்திகளாகவும் அமைந்து படிப்பவருக்கு இனிமையையும், உயிரோட்டமான கற்பனைத் திறனையும், மொழிக்கூறுகளை நாயன்மார்கள் கையாளும் விதம் அவர்களது மொழிநடைச் சிறப்பிற்கு மெருகூட்டுவதாக அமைகின்றது.

## முடிவுரை

ஆறாம் ஏழாம் திருமுறைகளை நடையியல் கூறுகளின் அடிப்படையில் ஆராய முற்படுகின்றபோது அவை எண்ணற்றனவாகக் காணப்படுகின்றன. நடையின் நல்லியல்புகள், இலக்கியப் பண்புகள்மிக்க பாடலடிகள், செறிந்த சீர்மையுடையனவாகக் காணப்படுகின்றன. நடையியல் நோக்கில் ஆறாம் ஏழாம் திருமுறைகள் என்ற இந்த ஆய்வானது அவர்கள் காலத்து மொழிநடை அமைப்பினையும், மொழியாற்றல் இலக்கணத் தெளிவு, இலக்கியச் சுவை போன்ற பல்வேறு கூறுகளால் தெளிவுபடுத்துகின்றது.

## உசாத்துணை

இரத்தினசிங்கம், சி.வ.,(2005),பன்னிரு திருமுறைகள் திரட்டு, மணிமேகலைப்பிரசுரம், சென்னை.

சுப்பிரமணியன், ச. வே.,(2007), பன்னிரு திருமுறை, மணிவாசகம் பதிப்பகம், சென்னை.

சுந்தரமூர்த்தி, இ., (1994),நடையியல் சிந்தனைகள், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.

நீதிவாணன், ஜெ., (1985), நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

வெள்ளைவாரணன், க.,(1975),பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

Suseendirarajah, S., (1980),Religion and Language in Jaffna Society, Anthropological Linguistics vol. 22, No. 8, Indiana University, U.S.A.